# செய்தி வெளியீடு

## குடியிருப்போர் நலச் சங்கங்கள் அனைத்தும் நுகர்வோர் பாதுகாப்பு அரண்களாக விளங்க வேண்டும் – மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் அறிவிப்பு

குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கத்தினை மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் சென்னை, நேரு உள் அரங்கத்தில் இன்று (25.10.2008) காலை 10.00 மணிக்கு துவக்கி வைத்தார்கள்.

வட சென்னையிலுள்ள குடியிருப்போர் நலச் சங்கங்களின் பிரதிநிதிகள் இக்கருத்தரங்கில் பங்கு பெற்றனர்.

மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் கருத்தரங்கினை துவக்கி வைத்து உரையாற்றுகையில் நுகர்வோர் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதற்காக வடசென்னை பகுதியிலுள்ள அம்பத்தூர், திருவொற்றியூர், இராயபுரம், அண்ணாநகர், பெரம்பூர், வில்லிவாக்கம் மற்றும் சிதம்பரனார் மண்டலங்களில் 06.09.2008 முதல் 18.10.2008 வரை ஒவ்வொரு சனிக்கிழமை மற்றும் மண்டல வாரியாக சுமார் 300 சங்கங்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு பொது சுகாதாரம், எடை அளவு கட்டுப்பாடு, இந்திய தர நிர்ணயம், மருந்து கட்டுப்பாடு போன்றவற்றில் நுகர்வோர் நலம் பேண நுகர்வோர்களுக்கு ஏற்படும் ஐயங்களை நீக்குவதே இந்த கருத்தரங்கின் குறிக்கோள்.

உலக மயமாக்கப்பட்ட வணிக முறைகள், பொய்யான விளம்பரங்கள், வணிகர்களின் பேராசை, முறையற்ற வணிக முறைகள், உணவுப் பொருட்களின் கலப்படம் ஆகியவற்றிலிருந்து நுகர்வோர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே குடியிருப்போர் நலச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு இப்பயிற்சி

அளிக்கப்பட்டுள்ளது. பொருள் அல்லது சேவையினை தொகை செலுத்தி பெறுபவர்களே நுகர்வோர்கள். ‘வணிகம் எனும் இராஜ்ஜியத்தில் நுகர்வோரை அரசன் என்றார்’ சுவாமி விவேகானந்தர். நுகர்வோர்களை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர் “வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தம் போல் செயின்” என்று சொல்லியுள்ளார்.

ஒரு பொருளை வாங்குவதற்கு முன் அதன் தரத்தை, திறத்தை, விலையை, உண்மைத் தன்மையை ஆராய்ந்து நுகர்வோர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நுகர்வோர்களுக்கு பாதுகாப்புக்கான உரிமை, தகவல் பெரும் உரிமை, தேர்ந்தெடுக்கும் உரிமை, முறையிடும் உரிமை, குறை தீர்க்கப் பெறும் உரிமை, நுகர்வோர் கல்விக்கான உரிமை, தூய்மை, சுற்றுச்சூழலுக்கான உரிமை, அடிப்படை தேவைக்கான உரிமை போன்ற உரிமைகள் உள்ளன. பல உரிமைகளை பெறும் நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வுடன் இருப்பது, தேவைக்கேற்ற நுகர்வு, பொருள் அல்லது சேவையினை முறைபடி பயன்படுத்துதல், பொறுப்புணர்ச்சி போன்ற சில கடமைகளும் உள்ளன.

ஒரு மனிதன் நோயற்ற வாழ்வு, முன்னேற்றப் பாதை, வளமான வாழ்வு, குறைந்த செலவில் நிறைவான வாழ்வு வாழ வேண்டுமானால் அடிப்படையில் நுகர்வோர் பற்றிய விழிப்புணர்வு கல்வி ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அவசியம். மெத்தப் படித்தவனும், சாமானிய மனிதனும் அவரவர் நிலையில் ஏமாற்றப் படுகின்றனர். வாங்கும் பொருள் எத்தரம் என்பதையும், பொருட்கள் பயன்படுத்துவதில் பாதுகாப்பு உடையதா என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். இந்த முக்கிய தகவல்களை பொதுமக்களுக்கு கொண்டு செல்லும் மகத்தான பணியைத் தான் நுகர்வோர் பாதுகாப்புத் துறையும், நுகர்வோர் அமைப்புகளும் செய்து கொண்டிருக்கின்றன. குடியிருப்போர்கள் தங்களின் உரிமைகளைப் பெறவே நலச் சங்கங்களை உருவாக்கியுள்ளனர். இச்சங்கங்கள் நுகர்வோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் அரண்களாக செயல்பட

வேண்டும். இக்குடியிருப்பு நலச் சங்கங்கள் நுகர்வோர் பாதுகாப்பு சங்கங்களாகவும் செயல்படும்போது நுகர்வோர்கள் எச்சரிக்கையாகவும் பொறுப்புணர்ச்சியுடனும் செயல்பட உதவ வேண்டும். நுகர்வோர்கள், குறைபாடுகளுடைய பொருட்களால் பாதிக்கப்பட்டால், இதற்கு நஷ்ட ஈடு பெறுவதற்கு குடியிருப்போர் நலச் சங்கங்கள் ஆலோசனைகளும், சட்ட உதவிகளும் வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட நுகர்வோர்களுக்கு நுகர்வோர் சங்கத்தில் இன்னும் பல நிவாரணங்கள் உள்ளன. நியாயமற்ற வர்த்தகத்தை தடை செய்யலாம். தீங்கு விளைக்கும் பொருட்களின் விற்பனையை தடை செய்யலாம், வழக்கு செலவுகளையும் திரும்பப் பெறலாம். நுகர்வோர்களின் உரிமைகளை பாதுகாக்கவே மாநில குறைதீர் ஆணையம் சென்னையிலும், மாவட்ட குறைதீர் மன்றங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்பட்டு வருகிறது. சிறப்பாக செயல்படும் நுகர்வோர் பாதுகாப்பு குழுக்களுக்கு ஆண்டுதோறும் அரசு பரிசு வழங்கி சிறப்பிக்கிறது. காவிரி டெல்டா பகுதிகளில் தான் நெல் விளைகிறது. நெல் விளையும் அப்பூமியிலேயே அரிசி வாங்க இயலாத நிலையில் மக்கள் வாழ்கிறார்கள் என்பதை அறிந்த தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ரூ.1/—க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தினார்கள் பொது விநியோகத் திட்டத்திற்கு இந்திய உணவு கழகம் அரிசியை ஆந்திரப்பிரதேசம், சத்தீஷ்கர் மற்றும் பஞ்சாப் மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்தும், டெல்டா மாவட்டங்களில் அரசே நேரடியாக நெல் கொள்முதல் செய்து நவீன அரிசி ஆலைகள் மூலம் அரவை செய்தும் வழங்கப்படுகின்ற அரிசி தரக்கட்டுப்பாட்டு அலுவலர்களால் தரச்சோதனை செய்து தான் நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்பப்படுகிறது. எனவே, ஒரு கிலோ அரிசி ரூ.2/—க்கு எந்த அரிசி வழங்கப்பட்டதோ, அதே அரிசி தான் தற்போது 1 கிலோ ரூ.1/—க்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் ஏழை எளிய பாமர மக்கள் பயன்பெற்று தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களை வாழ்த்துகின்றார்கள் என்பதற்காகவே ஒரு சிலர் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக நியாயவிலைக் கடையிலே வழங்கப்படும் அரிசி தரக்குறைவு என்று சொல்கிறார்கள். பொது

விநியோகத் திட்டம் 29,854 நியாயவிலைக் கடைகள் மூலம் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வழங்கல் அலுவலர், வட்ட வழங்கல் அலுவலர், மண்டல இணைப்பதிவாளர், துணைப்பதிவாளர், கூட்டுறவு சார் பதிவாளர் போன்ற அரசு அலுவலர்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், அதனை களைய ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்டுப்பாட்டு அறைகள் (ஊடிவேசடிட சுடிடிஅ) அமைக்கப்பட்டு, கட்டுப்பாட்டு அறைகளில் தெரிவிக்கப்படும் குறைகள் 24 மணி நேரத்தில் நிவர்த்தி செய்யப்பட்டு கொண்டிருக்கிறது. உத்தமர் காந்தியடிகள் பிறந்த தினமான 02.10.2008 முதல் வெளிமார்க்கெட்டில் அடக்க விலை ரூ.80/– முதல் ரூ.115/– வரையுள்ள 10 மளிகைப் பொருள் ரூ.50/–க்கு மானிய விலையில் வழங்கப்பட்டு கொண்டிருக்கிறது. இதன் மூலம் குறைந்தபட்சம் ரூ.30/– வரை சேமிக்கப்பட்டு, ஏழை எளிய மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட நல்ல திட்டங்களையெல்லாம் நுகர்வோர் நலச் சங்கங்கள் நடுநிலையோடு இருந்து உண்மை நிலையை பொது மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும்.

இக்கருத்தரங்கில் திரு. கே. இராஜாராம், இ.ஆ.ப., ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. கே. அன்பரசு, துணை இயக்குநர், தர நிர்ணயக் கழகம், திரு.டி.பி. சுந்தரமூர்த்தி, இ.கா.ப., கூடுதல் காவல் துறை ஆணையர் ஆகியோர் பங்கு பெற்று உரையாற்றினார்கள். நுகர்வோர் ஆர்வலர்கள் பலரும் பங்கு பெற்று நுகர்வோர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9